REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5960

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 23உ திங்கள் (8—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 24உ செவ்வாய் (9—11—54) [இதழ் 126

சீன அரிசியை இலங்கை பிரிட்டனுக்கு விற்கிறது!

கொழும்பு, நவ. 6—

பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றுடன் தன்னிடம் அதிகமாக கையிருப்புள்ள 30,000 டன் சீன அரிசியை விற்பனை செய்ய இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது.

சீனாவுடன் இலங்கை செய்துள்ள வர்த்தக பண்டமாற்று ஒப்பந்தப்படி அடுத்த ஆண்டில் இலங்கைக்கு 2,70,000 டன் சீன அரிசி வருமென்று தெரிகிறது. இதில் 1,00,000 அரிசி இலங்கையின் தேவை போக மீதம் இருக்குமாம். இதை உலக மார்க்கெட்டில் கொஞ்சம் கொஞ்சமாக விற்பனை செய்யலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றனர் என்று தெரிகிறது.

'பெரும்பான்மையினர் விருப்பத்தை அலட்சியப்படுத்தினர்'

'நடைமுறை குறிப்பேட்டில் பதியவும் மறுத்தார்'

'மக்களாட்சிப் பண்புக்கு மாறாக ஒரு ஜாதியாரையே தேர்ந்தெடுக்க அடம் பிடித்தார்'

நான் ஒரு அ. இ. கா. குழு உறுப்பினர்; என்னைக் காங்கிரசிலிருந்து நீக்க த. நா. கா. தலைவருக்கு அதிகாரமில்லை'

கரையாளர் தான்தோன்றித்தனத்திற்கு பெருமாள்சாமி கண்டனம்

"மாவட்டக் கழகத் தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக காங்கிரஸ் கட்சி மாவட்டக் கழக உறுப்பினர்களின் கூட்டத்தை, மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவர், வழக்கம்போல் நவம்பர் 3-ம் நாள் கூட்டினார். அக்கூட்டத்தில் பங்குகொள்ள வந்த திரு கரையாளர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அபேட்சகர்களாக, குறிப்பிட்ட ஒரு ஜாதியிலிருந்துதான் பொறுக்கியெடுக்க வேண்டுமென திரு. கரையாளர் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். ஜாதியைக் கருத்துள் கொள்ளாமல், பெரும்பாலான உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் ஒருவரைத்தான் தலைவராக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் விரும்பினர். குறிப்பிட்ட ஒரு ஜாதியினர் நியமனத்தை ஒப்புக்கொள்ள முடியாது என அவர் அடம் பிடித்தார். அதே கூட்டத்தில் டி.பி.கேசவ ரெட்டியாரின்பெயர் முன்மொழியப்பட்டும் பின்மொழியப்பட்டும் இருந்தும்கூட, அதை திரு.கரையாளர் ஒப்புக்கொள்ள மறுத்ததோடு மட்டுமல்லாமல், நடைமுறைக் குறிப்பு ஏட்டில் அதைப் பதிவு செய்துகொள்ளக்கூட முடியாது எனவும் மறுத்துவிட்டார். இருந்தாலும், கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களால் அபேட்சகராகக் கேசவ ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். கேசவ ரெட்டியாரை ஆதரித்த உறுப்பினர்களின் கையொப்பம் இடப்பட்டுள்ள மனு ஒன்றைக் கரையாளருக்குச் சேர்ப்பித்ததுடன், அதைக் குறிப்பேட்டில் பதிய வேண்டுமெனவும் வேண்டிக்கொள்ளப்பட்டது. வேண்டுகோளை உதறித்தள்ளிவிட்டு, திரு. சந்திரசேகரன் அவர்களை தலைவர் அபேட்சகராக, த. நா. கா. தலைவர் நியமித்துவிட்டார்."

" அகில இந்திய காங்கிரஸ் குழுவில் நான் ஒரு உறுப்பினன்; த. நா. காங்கிரஸ் குழு தலைவர், என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்குக் காங்கிரஸ் சட்ட திட்ட விதி இடமளிக்கவில்லை."

—*இவ்வாறு திரு. பெருமாள்சாமி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் காணக்கிடக்கிறது. அதில் மேலும் காணப்படுவதாவது :—*

" தலைவரைத் தேர்ந்தெடுக்க நடைபெற்ற மாவட்டக் கழகக் கூட்டத்தில், 19 வாக்குகளைப் பெற்ற மற்றொரு அபேட்சகருக்கு எதிராக, காங்கிரஸ் உறுப்பினர்களால் முன்-பின் மொழியப்பட்டு 31 வாக்கு(ஒன்று செல்லுபடியற்றது)களைப் பெற்று, திரு. கேசவ ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். நான் மாவட்டக் கழக உறுப்பினன் அல்ல; இருந்தாலும், நவம்பர் 3-ந் தேதி திரு. கரையாளர் அவர்கள் என்னுடன் தலைவர் தேர்தல் விஷயமாகக் கலந்து பேசினார்.

" ஒரு கட்சி அபேட்சகரைப் பொறுக்குவதில், கட்சிக்குள் எவர் ஒருவர் பலருடைய ஆதரவைப் பெற்றிருக்கிறாரோ, அவரையே பொறுக்கி எடுக்கும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மக்களாட்சி முறையைப் பின்பற்ற வேண்டுமென நான் கூறினேன். துரதிருஷ்டவசமாக திரு. கரையாளர், இந்தக் கருத்துரையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்.

" காங்கிரஸ் நியமன அபேட்சகருக்கு எதிராக வேலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி, என்னையும், மற்ற மூன்று காங்கிரஸ் கட்சியினரையும் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கி வைத்துவிட்டதாக பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்துவிட்டார்.

" திரு. கரையாளர் அவர்களும், பிரஸ்தாப சச்சரவில் சம்மந்தப்பட்டிருப்பவர்களில் ஒருவராக இருப்பதால், சம்பவத்தை விரிவாக ஆராய்ந்து காங்கிரஸ் கட்சியின் நியமன உறுப்பினர் யார் என்பதை முடிவு கட்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

குறிப்பு:—வட ஆற்காடு மாவட்டக் கழகத் தலைவர் தேர்தலில், காங்கிரஸ் கட்சியால் அதிகார பூர்வமாக நியமிக்கப்பட்ட அபேட்சகரை, ஒரு காங்கிரஸ்காரரான டி. பி. கேசவரெட்டியார் என்பவர் தோற்கடித்தார். அதன் எதிரொலியாக, காங்கிரஸ் நியமன அபேட்சகரைத் தோற்கடிப்பதில் தீவிரப் பங்கு கொண்டிருப்பதாகக் கூறி, முன்னாள் மந்திரி பெருமாள்சாமி ரெட்டியார் அவர்களை, த. நா. காங்கிரஸ் குழு தலைவர், காங்கிரசிலிருந்து தற்காலிகமாக விலக்கி வைத்துள்ளார். அதற்கான விளக்கமாகத்தான் மேற்படி அறிக்கையை பெருமாள்சாமி அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

வடஆற்காடு மாவட்டக் கழகத்தின் மொத்த உறுப்பினர்கள் தொகை 52. அதில் 36 உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

தப்பி ஓடியவனை போலீஸ் பிடித்ததின் விளைவு!

போலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் முற்றுகை

கூட்டத்தைக் கலைக்க துப்பாக்கிப் பிரயோகம்

ஆம்பூர், நவ. 7—

ஆம்பூர் தாலுக்கா போலீஸ் நிலையத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டு, கற்களை வீசினர். அங்கு காவலில் இருந்த ஒரு போலீஸ்காரரையும், சப்-இன்ஸ்பெக்டரையும் கூட்டத்திலிருந்தவர்கள் கற்களால் தாக்கினதாகத் தெரிய வருகிறது.

முன்னாள் இரவு மதுவிலக்கு சோதனையில் ஈடுபட்டுவிட்டு, ஒருவனைக் கைது செய்து போலீஸ் படையினர் கொண்டுவந்தனர் எனவும், அவனைப் பற்றிக் கொண்டு வந்த போலீஸ்காரரின் விரலைக் கடித்துவிட்டு தப்பித்துக் கொண்டு ஓடினபோது, அவனை போலீசார் துரத்திக்கொண்டு சென்றனர் எனவும், அப்பொழுது தவறி ஒரு சாக்கடையில் விழுந்துவிட்டதாகவும், விழுந்த நேரத்தில் அவனுடைய கழுத்தில் அறுப்பு காயம் ஏற்பட்டதாகவும், அதைக் கண்ட சிலர் அக்காயத்தைப் போலீசார்தான் உண்டாக்கி இருக்க வேண்டுமென சந்தேகித்து ஆத்திரப்பட்டு போலீஸ் நிலையத்தை வளைத்துக்கொண்டு, கற்களை வீசினார்களெனவும் சொல்லப்படுகிறது.

போலீஸ் நிலயத்தை வளைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்த கூட்டத்தைக் கலைக்க முதலில் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், கூட்டம் கலையாமல் இருக்கவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், அதன் பலனாக ஒருவருக்கு காயமேற்பட்டிருப்பதாகவும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

கோவாவில் கொடுமை புரியும் போர்த்துகீசியர்!

இணைப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்ட பலர் கைது

போலீஸ் கொட்டடியில் விடுதலை வீரர்கள் சித்ரவதை!

பம்பாய், நவ. 6—

கோவாவில் உள்ள போர்த்துகீசிய ஆதிக்கக்காரர்கள், தேசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்தி 13 பேர்களைக் கைது செய்துள்ளனர்; ஒரு ஆசிரியரைப் பள்ளியிலிருந்து விலக்கியிருக்கின்றனர் என்று செய்திகள். கோவா தேசிய காங்கிரஸ் வட்டாரத்திற்குக் கிடைத்துள்ள என்று தெரிகிறது.

அகில இந்திய வானொலியின் செய்தி ஒலிபரப்பைக் கேட்பதற்குக் கூடியிருந்த 10 பேர்களை கோவா போலீசார் கைது செய்தனராம். அவர்களில் ஒருவர் முன்னாள் கிராமாதிகாரியாம்.

பஞ்சிம் எனுமிடத்தில் கைது செய்யப்பட்ட அத்தனை பேரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதே காரணத்திற்காக கடந்த மாதத்தில்கூட 10 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சாங்கொலிம் எனும் இடத்தைச் சேர்ந்த பிரபல வியாபாரியான மனோகர் வாமன் சடேகர் என்பவரும் இன்னுமிருவரும், கடந்த அக். 25-ந் தேதியன்று, இந்தியாவுடன் இணைவதற்காகக் கிளர்ச்சி செய்தார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர் எனத் தெரிகிறது. கைதான அம்மூவரும் போலீஸ் லாக்காப்பிலிருக்கும்போது, சித்ரவதை செய்யப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவைச் சேர்ந்த ஷிவராம் ஜோஷி என்பவர் மார்சாவ் எனும் இடத்தில் உள்ள ஆங்கிலப்பள்ளியொன்றில் தலைமையாசிரியராக பணி புரிந்து வந்தார். எவ்விதக் காரணமும் காட்டப்படாமலேயே அவருக்கு, 48 மணி நேரத்திற்குள்ளாக, அவர் கோவாவைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

திரு-கொச்சி தமிழர் விடுதலைப் போர்

மூன்று மாத சிறை தண்டனை பெற்ற தி. மு. கழகத் தோழர்கள் விடுதலை

திருவனந்தபுரம் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு

திரு—தமிழக போராட்டத்தின் போது ஆகஸ்ட் 6-ந் தேதியன்று தி. மு. கழகத்தின் அடையாள மறியலில் பங்கு கொண்டு, மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, திருவனந்தபுரம் மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வந்த தோழர்கள் பி. இராமச்சந்திரன், ஈ. சுடலையாண்டி, கே. காளிமுத்து, என். சுவாமிநாதன், ஏ. இராசா, பி. சங்கரன், ஆர். இரவீந்திரன், எஸ். சுப்பிரமணியம், சி. இர்ராமச்சந்திரன், கே. ஆறுமுகம் ஆகியவர்கள் 5—11—54-ல் தண்டனை முடிவுற்று விடுதலை அடைந்ததை முன்னிட்டு, அன்று காலை திருவனந்தபுரம் தி. மு. கழகத் தோழர்களும், நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களும் சிறைவாயிலில் தோழர்களை வரவேற்க வந்திருந்தனர்.

காலை 11 மணிக்கு விடுதலை அடைவதாக இருந்த தோழர்களை 12-45 மணிக்கு விடுதலை செய்தனர்.

திருவனந்தபுரம் தி. மு. கழகத் தோழர்கள் மலர் மாலைகள் அணிவித்து, தோழர்களை ஊர்வலமாகக் கழகக் காரியாலயத்திற்கு அழைத்துச் சென்று தேனீர் விருந்து அளித்து, நாகர்கோயிலுக்கு வழியனுப்பி வைத்தனர். (ஈ. வி.)

விமானப் படை அதிகாரிகளுக்கு மரண தண்டனை

ராஜத் துரோகக் குற்றம் செய்ததாக, ஈரான் விமானப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் ஏழு பேர் மரண தண்டனை விதிக்கப்பெற்றுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—11—1954 திங்கள்

கடன் ஒத்திவைப்பு சட்டம்

புதிய கல்வித் திட்டத்தைத் தான்தோன்றித்தனமாகத் திணித்ததினால் ஏற்பட்ட செல்வாக்குச் சரிவிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும், தம் பதவி பறிக்கப்படாமலிருக்க சில சட்டசபை உறுப்பினர்களின் உறவைப் பெறவும், ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தபொழுது செயலாற்றப் பட்ட விவசாயக் கடன் ஒத்திவைப்புச் சட்டம் அடுத்த பிப்ரவரி மாத முடிவோடு செத்து மடிகிறது. அந்தச் சட்டத்தின் விளைவாக, சிறு நிலம் படைத்த விவசாயிகளும், மற்ற பெரும் பெரும் மிட்டா மிராசுகளும் பெற்ற பாதுகாப்பும், அந்தச் சட்டத்துடன் ஒழிந்து போகிறது.

அந்தச் சட்டத்தில் கிடைத்துள்ள பாதுகாப்பினால் ஏற்படுகிற பரிகாரம், இடைக்காலத்தில் சாந்தியளிக்குமேயல்லாது, நிலையான நலத்தை விவசாயிகளுக்கு அளிக்கப் போவதில்லை என்று நாம், அந்தச் சட்டம் கொண்டு வந்தபொழுதே விளக்கி இருந்தோம். அச்சட்டத்தினால் விவசாயிகள் பெறுகிற லாபத்தைக் காட்டிலும், ஓராண்டுக்குப் பிறகு பெறப்போகிற தொல்லை பயங்கரமாக இருக்கும் எனவும் நாம் அப்பொழுது கூறி இருந்தோம். சட்டத்தின் மரண காலம் நெருங்க நெருங்க, அச்சட்டத்தால், கடந்த சில திங்களாகக் கடன் கொடுக்க வேண்டுமே எனும் அச்சமின்றி காலங் கழித்து வந்தவர்கள், சட்டம் சாகும் காலம் விரைவது கண்டு அஞ்சித் துடிதுடிக்கின்றனர். அதை மேலும் நீடிக்க வேண்டுமென்று வேதனையுடன் கூறுகின்றனர்; அவர்கள் நிலை பரிதாபத்துக்குரியது என்பதில் ஐயமில்லை.

ஏழை விவசாயிகளின் சார்பில் பேசும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு, அதற்காகப் பிறந்திருப்பவர்கள் தாங்கள் மட்டுமேதான் என்று பீத்திக் கொண்டு திரிபவர் சிலர், மேற்படி விவசாயியின் வேதனை விம்மலை ஒரு புகலாகக் கொண்டு, கடன் சட்டத்தை நீடிப்பதின் அவசியத்தை அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றனர். தங்களுடைய அரசியல் சூதாட்டத்திற்கும், ஆயிரம் மாகாணி அறுபத்திரெண்டரை என்ற சொந்த வயிற்றுப் பிழைப்புக்கும், கடன் ஒத்திவைப்புச் சட்டம் காலாவதியாவதை ஒரு அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். இதன் விளைவாக 'இன்குலாப் ஜிந்தாபாத்' முழக்கம் கிளம்பினாலும் கிளம்பக் கூடும். திருமண வீட்டிலேயே ஒப்பாரி வைக்கப் பயிற்சி பெற்றிருப்பவர்கள், பிணத்தைக் கண்ட பிறகும் சும்மாவா இருப்பார்கள்?

வட்டிக்குப் பணம் கிடைக்காது; நாட்டின் நாணயம் சீர்குலைந்துவிடும்; விவசாய வளர்ச்சிப் பாழாகிவிடும்; உணவு உற்பத்தி தேய்ந்துவிடும் என்றெல்லாம், மற்றொரு கூட்டம், மேற்படி சட்டத்தை மேலும் நீடிக்கக் கூடாது என்பதற்குக் காரணமாகக் காட்டி வாதிடக் கிளம்பி உள்ளன. இந்தக் கூட்டத்தில் பரம்பரை வழக்கறிஞர்களும், பணத் திமிங்கிலங்களும் சேர்ந்துள்ளன. நிற்க,

இந்த ஓராண்டு காலத்தில் சிறு சிறு நிலம் படைத்த ஏழை பட்டாதாரர்களில் எவ்வளவு பேர், கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதை மெய்ப்பிப்பதற்கான புள்ளி விவரங்கள் கிடையாது. ஏதோ ஏழை விவசாயிகள், சட்டத்தின் விளைவாக, கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி வசூலில் இருந்து காப்பாற்றப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று யூகித்துத்தான் சொல்லப்பட்டு வருகிறது. எனவே, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தினால் ஏற்பட்ட விளைவு வெறும் யூகமே அல்லாது, சரியான ஆதாரங்களின் மீது உருவானது அல்ல.

நமது கிராமங்களிலிருந்து வரும் பலதிறப்பட்ட வகுப்பினர்களிடையே இருந்துவரும் உறவுமுறைகளை உணர்ந்துள்ளவர்களுக்குத் தெரியும்—கிராமங்களில் கடன் கொடுப்பதும், கொடுத்த கடனை வசூலிப்பதும் எந்த முறையில் நடைபெறுகின்றன என்பது. சிறு நிலச் சொந்தக்காரர்களைப் பொறுத்த வரையில், ஆயிரத்துக்கு ஒன்று வீதம்கூட, கொடுத்த கடனை வசூலிக்க வழக்கு மன்றமேறுவது என்பது இருக்காது. பெரும்பாலும் வாய் மிரட்டு, கை மிரட்டு என்ற முறைகளிலேயே கிராமத்தில் பணம் கொடுக்கல்-வாங்கல் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றன. இம்முறை பெரிதும் வழக்கத்திலுள்ள கிராம விவசாயிகளுக்கு, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால் கடுகளவு பாதுகாப்பும் ஏற்பட்டிருக்க இடம் கிடையாது. இந்தப் பொது முறைக்கு ஓரிரு சம்பவம் முரண்பட்டதாக இருக்கக்கூடும். அந்த ஓரிரு விவகாரத்தை வைத்துக் கொண்டு, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தால் சிறு சிறு பட்டாதாரர்கள் பெற்ற நன்மைகளைக் கணக்குப் போடுவதுப் கூடாது; அது அறிவுடைமையுமாகாது.

சிறு நில பட்டாதாரர்களாக உள்ள ஏழை உழவர்களைக் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்ற வேண்டியது இன்றியமையாதது என்பதில் நமக்கு உடன்பாடு உண்டு. அதற்காக, கடன் கொடுத்தவர்களின் கடனுக்கு பட்டைநாமம் சாத்துவது என்பது நியாயமாகாது. மேற் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த ஏழை விவசாயிக்குக் கடன் கொடுத்திருப்பவர்களும், பணபலத்தில், அதே உழவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் தான். எனவே, ஒரு ஏழை உழவனைக் காப்பாற்றுவதற்காக, மற்றொரு ஏழையின் பணத்தைப் பறித்துக்கொள்ளுவது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடாதது — கண்டிக்கத் தக்கது.

ஏழை உழவர்களைக் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்ற வழிவகை காண்பதற்கு முன்னதாக, 'ஏழை உழவர்' யார் என்பதை அரசாங்கம் வரையறுக்க வேண்டும். அதன் பிறகுதான் அவன் இனத்தவர் பட்ட கடனுக்குப் பரிகாரம் தேட அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பட்ட கடனிலிருந்து அந்த 'ஏழை உழவனை' இந்த ஒரே ஒரு தருணத்தில்மட்டும் காப்பாற்றி விடுவதோடு அரசாங்கம் நின்றுவிடக் கூடாது. இனிமேல் கடன் பட்டுத்தான் பயிர் செய்ய வேண்டும் என்ற அவல நிலைக்கு 'ஏழை உழவன்' இனி என்றென்றும் ஆளாகாமல் இருக்கவும் அரசாங்கம் சிறந்த ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் இதுபற்றி விவரமாகப் பின்னர் எழுதுவோம்.

நகரசபை - நிர்வாக அதிகாரி

'வள்ளித் திருமணம்' நடத்தினாராம்!

தக்க பக்க மேளதாளங்களுடன் கதா காலட்சேபம்!

திருச்சிக்கடுத்த ஸ்ரீரங்கம் நகரசபையின் நிர்வாக அதிகாரியான (சர்க்கார் நியமிக்கும்—கமிஷனர்) திரு. சி. ஆர். நாராயணசாமி திருவானைக்கோவில், ஜம்புலிங்கேஸ்வரர் தேவஸ்தான சார்பில், முருகன் சன்னதிக்கு எதிரில் 'வள்ளி திருமணம்' குறித்து தக்க, பக்க மேளதாளங்களுடன் கதாகாலட்சேபம் செய்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

அவரது பக்க வாத்தியக் குழுவில் பிடில், மிருதங்கம், தாளம் தப்பட்டை இவையெல்லாம் இடம் பெற்றிருந்தனவாம்.

இதே சர்க்கார் அதிகாரி, சின்னாட்களுக்கு முன்பு, 'பார்வதி பரிணயம்' என்பது பற்றியும் இசை அரங்கம் நடத்தினாராம்.

ஆக்க வேலைக்கு அணுசக்தி!

அமெரிக்காவின் தாராளம்

அமைதிக்கான முயற்சிக்காக ஆக்க வேலைகளைச் செய்ய அணு நிலையங்களைக் கட்டித் தருவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ஐ. நா. சபையின் அரசியல் குழுவில் பேசுகையில் அமெரிக்கப் பிரதிநிதி ஹென்றி காபட் லாட்ஜ் இச்செய்தியைத் தெரிவித்துள்ளார்.

அரிசிக் கட்டுப்பாடு

பாகிஸ்தானில் நீங்குகிறது!

பாகிஸ்தான் சர்க்கார், உள்நாடு முழுமையும் அரிசிக் கட்டுப்பாட்டை நீக்கியுள்ளனர்.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து தடையின்றி அரிசி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

பிரான்ஸ் மக்கள் சபை தலைவர்களுக்கு அழைப்பு

சோவியத் பிரதமரான மாலன்காவ், பிரான்சு நாட்டு செனட் சபை, தேசிய சட்டசபை ஆகியவற்றின் தலைவர்களுக்கு, மக்கள் சபை உறுப்பினர் தூதுக் குழு ஒன்றினைத் தலைமையேற்று ரஷ்ய நாட்டிற்கு வருகை தருமாறு அழைப்பு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

பிரெஞ்சுத் தூதுக் குழு அழைக்கப்பட்டிருப்பதின் மூலம், மேற்கு-கிழக்கு உறவுகள் வளரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

'தமிழர்களின் வீர உணர்ச்சி மீண்டும் உருவாக வேண்டும்!'

'கடாரம் வரையில் சென்று கலாசாரத்தைப் பரப்பினவர்கள் தமிழர்கள்!'

சிங்கப்பூரில் டாக்டர் உசேன் நயினார் சொற்பொழிவு

"இந்தோனேஷியாவுக்கும், அதன் சுற்றுப்புற பிரதேசங்களுக்கும் முதல் முதலாகத் தென்னிந்தியர்கள்—குறிப்பாகத் தமிழர்கள் தான், அவர்களுடைய கலாச்சாரம், நாகரீகம், மதம் அனைத்தையும் பல வழிகளில் கொண்டு வந்தனர்,"

—என்று, சென்னை பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியரான டாக்டர் முகமது உசேன் நயினார் கூறினார்.

இந்தியா, இந்தோனேஷிய நாடுகளுக்கிடையே உள்ள கலாச்சாரத் தொடர்புகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தருமாறு டாக்டர் உசேன் இந்திய சர்க்காரால் அனுப்பப்பட்டிருக்கிறார்.

"இந்தியாவும் கிழக்கிந்தியத் தீவுகளும்," என்ற தலைப்பில் பேசுகையில்தான், அவர், இவ்வாறு கூறினார்.

"தமிழர்களுக்கு இப்பகுதிகளில் இருந்த ஆதிக்கமும், மதிப்பும், அவர்களுடைய வாணிபம் நின்று போனமையால் எவ்வாறு மறைந்து போயிற்று என்பதை அவர் எடுத்துக் காட்டினார்

"தாங்கள் இழந்துவிட்ட மதிப்பை அவர்கள் மீண்டும் பெறவும், முன்னைய நாட்களைப்போல் பெருஞ்செல்வம் திரட்டவும், தமிழர்களிடையே காணப்பட்ட வீர உணர்வு மீண்டும் உருவாக வேண்டும்" என்று, அவர் மேலும் கூறினார்.

புதுச்சேரியில் நிலச் சுங்கம் நீடிக்கிறது

பதுக்கல் பொருள்களை வெளியில் கொண்டுவர முயற்சி

இந்திய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் காரைக்கால், மாகி, ஏனாம், புதுச்சேரி ஆகிய நான்கு பகுதிகளிலும், நிலச் சுங்கம், இணைப்பிற்கு முன்பு இருந்தது போலவே நீடிக்குமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனை விளக்கி வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் சுங்க இலாகா அதிகாரி அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்.

நவம்பர் முதல் தேதிக்கு முன்னர் ஏராளமான பொருள்கள் இப்பகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும், இப்பொருள்களை இந்திய யூனியனுக்குள் ஏற்றுமதி செய்யவேண்டுமென்றால், அவைகளுக்குச் சுங்க வரி கட்டுவது அவசியம் என்றும்; இப்பகுதிகளில் அப்பொருள்களை விற்பனை செய்யத் தடை ஏதும் இல்லை என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சுங்க வரி கட்டாமல் இப் பகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்திற்கும் தரைச் சுங்கம் விதிக்கப்பட்டுவிட்டது என்பது தெளிவாகும் வரையில், இப்போதைய சுங்க ஏற்பாடுகள் நீடிக்கும் என்று தெரிகிறது. இந்தியப் பகுதிகளிலிருந்து முன்னாள் பிரெஞ்சு இந்தியப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு வரி ஏதும் கிடையாது என்றும் தெரிகிறது.

லியாகத் அலிகான் படுகொலை விசாரணை

பிரிட்டிஷ் பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த சி. டபிள்யூ. ஈயுரன் என்பவரை லியாகத் அலிகானின் படுகொலை பற்றி தொடர்ந்து விசாரணை செய்யுமாறு பாகிஸ்தான் சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

அவர் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

"நான், ஆரம்ப முதல் வேலை துவங்க வேண்டியிருக்கிறது," என்று அவர் கூறினார்.

முஸ்லிம் மத வெறிக் கழகத்தினர்

சர்க்காருடன் சமரசம் பேசுகின்றனர்!

எகிப்து சர்க்காரால் கலைக்கப் பட்ட முஸ்லிம் சகோதர உதவிக் கழகமென்னும் மதவெறிக் கழகத்தின் உபதலைவர் அப்துல் காதர் ஆவ்தா என்பவர், 'அமைதி'யாக சர்க்காரும், முஸ்லிம் மத வெறிக் கழகமும் இருக்கலாம் என்று எகிப்துப் பிரதமர் நாசருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது.

ஆவ்தா, சிறையிலிருந்தே இக்கடிதத்தை எழுதியுள்ளார் என்று தெரிகிறது. இவருடன் இககட்சியைச் சேர்ந்த 640 பேர் சிறையில் இருக்கிறார்களாம்.

'இக்கடிதம் மற்றொரு புதிய சூழ்ச்சி,' என்று பிரதமர் நாசர் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் மதவெறிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று சர்க்கார் உறுதியளித்தால், கட்சியினரிடம் உள்ள வெடி மருந்துகள், ஆயுதங்கள் அனைத்தையும் தந்துவிடுவதாகவும், இராணுவம், மற்றும் இதர இடங்களில் உள்ள இரகசியப் பிரிவினரின் பெயர்களைத் தந்துவிடுவதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதாம்.

'யார் மீதும் நடவடிக்கை எடுப்பதில்லை,' என்ற உறுதியளிக்கப் பட்டால் தாங்கள் அரசியலைவிட்டு விலகிவிடுவதாக அப்துல் காதர் வாக்குறுதியளித்திருக்கிறாராம்.

இவர்கள் மீதுள்ள சதி வழக்கு பத்தாம் தேதியன்று ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

முந்திரித் தொழில்

250 லட்சம் டாலருக்கு ஏற்றுமதியாகிறது

100 ஆண்டுகளாக தென்னிந்தியாவில் வளர்ந்து வரும் முந்திரித் தொழிலில், இந்தியாவிற்கு, சணலுக்கு அடுத்தபடியாக டாலர் வருமானம் கிடைக்கிறதாம்.

இத்தொழிலின் முக்கால் பங்கு தென்னிந்தியாவில்தான் நடைபெறுகிறது.

தென்கன்னடம், மலபார், திரு-கொச்சி ஆகிய பகுதிகளில், முந்திரித் தொழில் அதிக அளவில் காணப்படுவதுடன், இத்தொழிலை அபிவிருத்தி செய்ய தென்னிந்தியாவின் மற்ற பகுதிகளில் வாய்ப்பு இருக்கிறதாம்.

ஆண்டுதோறும், 250 லட்சம் டாலர் பெறுமான முந்திரிப் பருப்பு ஏற்றுமதியாகிறதாம்.

பர்மா-ஜப்பான் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

ஜப்பான் - பர்மா ஆகிய இரு நாடுகளுக்கிடையே அமைதி ஒப்பந்தம் ஒன்று இரங்கூனில் கையெழுத்தாயிற்று.

இந்த இரு நாடுகளுக்கும் இடையே இராஜ தந்திர உறவு ஏற்படுவது இதுவே முதல் தடவையாகும்.

பதின்மூன்று ஆண்டு காலத்திற்கு முன்னர் பிரகடனம் செய்யப்பட்ட போர்நிலை இந்த ஒப்பந்தத்தின் மூலம் முடிவடைகிறது.

கழகச் செய்திகள்

பந்தநல்லூர் தி. மு. கழக துவக்க விழா

30—10—54 மாலை 6-30 -
மணிக்கு பந்தநல்லூர் தியேட்டரில்
தோழர் என். தமிழ்ச்செல்வம்
தலைமையில் இவ்வூர் தி. மு. கழக
துவக்க விழாப் பொதுக்கூட்டம்
நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் தி. மு.
க. கொள்கைகளைப் பற்றி விளக்
கிப் பேசினார். தோழர் தி. துரை
ராசன், கழகப் பண் பாடினார்.
தோழர்கள்: ம. கோ. மணி,
பொன். தருமலிங்கம், அ. பொன்
னம்பலனார் ஆகியவர்கள் தி. மு.
கழகப் போராட்டங்களின் வெற்றி
களைக் குறித்தும், சமூக - அரசி
யல் - பொருளாதார விடுதலை
பெற தி. மு. கழகத்தில் சேர்ந்து
பணியாற்றும்படி கேட்டுக்கொண்
டும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

தோழர் அ. பொன்னம்பலனார்
அவர்கட்கு, உள்ளூர் தி. மு. கழ
கம், நெற்குப்பை தி. மு. கழகம்
சார்பில் மலர் மாலையும், கைத்தறி
துணிகளும் அணிவிக்கப்பட்டன.

ஆற்றங்கரை தி. மு. க. துவக்க விழா

26—10—54-ல், இவ்வூரில் தி.
மு. க. துவக்க விழா பொதுக்கூட்
டம் தோழர் கந்தையா தலைமை
யில் நடைபெற்றது. தோழர்கள்
ஜோதி முத்து, அழகிரிசாமி,
இராமையா ஆகியோர் இயக்கப்
பாடல் பாடினர்; இரா. கேசவன்,
சர்க்கரை ஆகியோர் பேசினர்.
பின்னர், மதுரை தோழர் எஸ்.
முத்து கழகக் கொடியை ஏற்றி
வைத்து, தி. மு. கழகத்தின் சமு
'தாய, அரசியல் கொள்கைகளை
விளக்கிப் பேசினார்.

கழகத்திற்கு கீழ்க்கண்டவர்கள்
நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்
பட்டனர்:— செயலாளர்கள்
கந்தையா, தங்கசாமி; விளம்பர
உறுப்பினர்கள்: சோலையப்பன்,
பெருமாள்; பொருளாளர்: மேக
ரத்தினம்.

ஓமலூர் வட்டம் தி. மு. க. கிளை துவக்க விழா

27—10—54 மாலை 4 மணிக்கு,
தோழர் டி. சுந்தரம் தலைமையில்
ஓமலூர் வட்டம் தி. மு. கழகக்
கிளை துவக்கப்பட்டு, கழக செயற்
குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்
கப்பட்டனர்:—செயலாளர்: அப்
துல் சுபான்; துணைச் செயலாளர்:
க. முத்துமல்லப்பன்; பொருளா
ளர்: து. சுந்தரம்; மாவட்டப்பிரதி
நிதி: தன்சீர். ஓ. கே. சிவராமன்,
பெ. செல்லப்பன், அங்கமுத்து,
மு. இத்தன், ம. வரதராசன், சி.
சின்னப்பன், கு. யுவராசு ஆகியோ
ரும் கழக உறுப்பினர்களாகத்
தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பழனியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—10—54 மாலை 6-30
மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்
பில், அடிகள் சிவநேசம் தலைமை
யில் நடைபெற்ற பொதுக்கூட்டத்
தில், தோழர்கள் அப்பாவு,
இளமுருகு - சொற்செல்வி ஆகி
யோர் கல்லக்குடி போராட்டம்
பற்றிப் பேசிய பின், பல சங்கங்
களின் சார்பில், தோழர் ஈ.வெ.கி.
சம்பத், இளமுருகு-பொற்செல்வி,
அப்பாவு ஆகியோருக்கு கைத்தறி
ஆடைகளும், பட்டு மாலைகளும்,
பூமாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சம்பத் அவர்கள் பேசு
கையில், நமது நியாயமான கோரிக்
கைகள், போராட்டங்கள் பற்றியும்,
காமராசரை நாம் பாராட்டுவதின்
காரணம், முதல் ஐந்தாண்டுத்
திட்டம் எவ்விதம் திராவிடத்திற்
குப் பாதகமாக இருக்கிறது, நேரு
வுக்குப் பின் யார் என்ற கேள்வி
யின் அர்த்தம் ஆகியவை பற்றியும்
விளக்கவுரையாற்றினார்.

வாங்கப்பாளையத்தில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

25—10—54 மாலை 6-30
மணிக்கு கரூர் வட்ட தி. மு.
கழகச் சார்பில், தோழர் கே. எஸ்.
பெரியசாமி தலைமையில் நடை
பெற்ற பொதுக் கூட்டத்தில்,
தோழர்கள் நன்னியூர் நாவரசன்,
கே. ஏ. முருகேசன், எம். கே.
கரிகாலன், டி. ஆர். முத்துசாமி,
நா. இராமசாமி ஆகியோரும், மற்
றும் பலரும், இயக்கக் கருத்துக்
கள் பற்றி விரிவுரையாற்றினர்.

நாகலாபுரத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம்

28—10—54 அன்று, இவ்வூர்
தி. மு. கழகச் சார்பில் தோழர்
இரா. கேசவன் தலைமையில் ஓர்
மாபெரும் பொதுக்கூட்டம் நடை
பெற்றது. அப்பகுதியில் வாழும்
விவசாயிகள் புகையிலை உற்பத்தி
செய்வதில் உள்ள கஷ்டங்களை
சர்க்கார் கவனிக்கும்படியும், அப்
பகுதியிலிருந்து சாத்தூருக்கு
நேரடியாகச் செல்லும் சாலையில்
பாலங்கள் கட்டி வசதி செய்து
கொடுக்கும்படியும், இலங்கை வாழ்
தமிழர்களின் கஷ்டங்களை நீக்கும்
படியும் சென்னை சர்க்காரை கேட்
டுக்கொள்ளப்பட்டது. மேலும்,
மதுரைதோழர் எஸ். முத்து, தி.மு.
கழகத்தின் கொள்கை-லட்சியங்
களை விளக்கி சொற்பொழிவாற்
றினர்.

புதுக்கோட்டை தி. மு. க.

5-வது ஆண்டு நிறைவு விழா

30—10—54-ல், தோழர் எஸ்.
ஆர். கந்தசாமி தலைமையில் நடை
பெற்ற இவ்வூர் கழக 5-ம் ஆண்டு
நிறைவு விழாவில் தோழர்கள் கே.
வி. கே. சாமி, கே. தாளமுத்து,
ச. வே. பண்டியன், வெண்மதியன்,
அண்ணாமலை ஆகியோர் தி. மு.
கழகத்தின் சமுதாய, பொருளா
தார, அரசியல் கொள்கைகள் பற்
றியும், திராவிடம் தனித்தியங்க
வேண்டுமென்ற காரணத்தையும்
விளக்கினர். பின்னர், சிறையில்
வைக்கப்பட்ட தூத்துக்குடி தி. மு.
கழகத் தோழர்களை நிபந்தனை
யின்றி விடுவிக்கவும், பாகிஸ்தானி
லிருந்து வெளியேற்றப்பட்ட
அகதிகளுக்கு உதவுவது
போல் இலங்கையிலிருந்து வெளி
யேற்றப்படும் தமிழர்களுக்கும்
கவனிக்கும்படி மத்திய அரசாங்
கத்தை வற்புறுத்தியும், இவ்வூரில்
வீணாகச் செல்லும் உப்பாற்று நீரை
தேக்கி, அவ்வூர் விவசாயத்திற்குப்
பயன்படும்படி மாவட்ட மன்றத்
தில் தூண்டும்படி, அந்தத் தொகு
தியைச் சேர்ந்த உறுப்பினரைக்
கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள்
நிறைவேற்றப்பட்டன.

சென்னை—புளியந்தோப்பு தி. மு. கழகம்

31—10—54 காலை 9 மணிக்கு
தோழர் ச. கோ. நாராயணசாமி
தலைமையில் நடைபெற்ற செயற்
குழுக் கூட்டத்தில், இம்மாத இறு
திக்குள் ஓர் பொதுக் கூட்டம்
நடத்துவதெனவும், பொது உறுப்
பினர் கூட்டத்தை சீக்கிரத்தில்
கூட்டுவதெனவும், கழக இரவு
பள்ளிக்கு ஆசிரியர்களை நியமித்
தும், மற்றும் கழக ஆக்கவேலைகள்
குறித்தும் சில முடிவுகளும் செய்
யப்பட்டன.

பம்பாய் தி. மு. கழகம்

21—10—54ல் அன்று தாராவி
'திராவிடரகத்'தில் தோழர் இரா.
வளர்மதி தலைமையில் நடைபெற்ற
உறுப்பினர் கூட்டத்தில், தோழர்
எஸ். தியாகராசன் தி.மு.க. முதல்
மாநாட்டு விவரங்கள் பற்றி எடுத்
துரைத்தார். பின்னர், முக்கிய
முடிவுகள் பல செய்யப்பட்டன.

'புராணக் கதை உருவில் உலாவும் ஆபாசத்தை ஒழிக்க வேண்டும்'

நிதி அமைச்சருக்கு எம். ஜி. ஆர். அறைகூவல்!

சென்னை, நவ. 5—

தென்னிந்திய ரயில்வே தமிழ்க்
கலை மன்றத்தின் சார்பில், தோழர்
இரா. தண்டபாணி எழுதிய
"எங்கே இன்பம்" என்ற சமூக
நாடகம் இன்று மாலை 6 மணிக்கு
சென்னை, செயின்ட்மேரிஸ் மண்ட
பத்தில் நிதியமைச்சர் திரு. சி.
சுப்பிரமணியம் தலைமையில் நடை
பெற்றது.

முன்னுரையாகப் பேசும்போது
திரு. சுப்பிரமணியம் அவர்கள்,
"இலக்கியத்தைப் பற்றிய ஆராய்ச்
சியில் முதியவர்களும், ஓய்வுள்ள
செல்வந்தர்களும்தான் இதுவரை
ஈடுபட்டு வந்தனர்; ஆனால், இப்
பொழுதெல்லாம் இவ்வித இளைஞர்
கள் முன்னணியில் நிற்பதைப்
பார்க்க நான் மகிழ்ச்சி கொள்
கிறேன்; எனக்குப் பின்னால் நடி
கர் எம். ஜி. இராமச்சந்திரன்,
'நடிப்பை'ப் பற்றி விளக்கமாகப்
பேசுவார் என எதிர்பார்ப்பதால்
நான் முடித்துக்கொண்டு, திரு.
இராமச்சந்திரன் அவர்களைப் பேசு
மாறு அழைக்கிறேன்," என்றார்.

எம். ஜி. இராமச்சந்திரன் பேசு
கையில், "நடிப்பைப்பற்றிப் பேசு
வதற்கு—நடிகர்கள் இந்த நாட்டில்
எவ்வாறு கருதப்படுகிறார்கள் என்
பதை விளக்குவதற்கு—இந்த
மாநிலத்தின் பொறுப்பு வாய்ந்த
ஒரு இலாகாவின் அமைச்சராக
உள்ளவரின் தலைமையில் பேச
வாய்ப்பு கிடைத்தமைக்காக
மகிழ்ச்சியுறுகிறேன். நடிப்பைப்
பற்றி நான் அதிகமாகப்
பேசுவேன் என்று தாம் எதிர்
பார்ப்பதாக தலைவர் குறிப்பிட்
டார். நான் அதிகமாகப் படிக்
காதவன்; ஆனாலும், ஏழு வயதி
லிருந்து இன்றுவரை நாடகத்
துறையில் எனக்கு ஏற்பட்ட அனு
பவங்களிலிருந்து ஒரு சில கூற
விரும்புகிறேன். நாடகம் சமுதா
யத்தில் உள்ள சீர்கேடுகளை எடுத்
துக் காட்டி, அவை களையப்படுவ
தற்கான கருத்துக்களைப் பிரதி
பலிப்பதாக இருக்க வேண்டும்.
மக்களை ஏய்த்துப் பிழைப்பதாக
உள்ள நாடகங்களை, நடிகர்கள்
நடிக்கக்கூடாது. ஆடை வாங்கு
கிறவன் தனக்கு வேண்டுமென்ற
ஆடையை வாங்கிக் கொண்டு,
அதற்குரிய தொகையைக்
கொடுத்துவிட்டு திருப்தியுடன்
செல்கிறான்; அதுபோல், நாடகம்
பார்த்தவர்கள், நாடகத்தைப் பற்றி
திருப்திப்பட்டு, 'நாட்டுக்குத்
தேவையானதுதான் இது' என்று
கருதும்படியான நாடகங்களை
நடிக்க வேண்டும்.

இந்தத் தருணத்தை ஓர் நல்ல
தருணமாகவே கருதி தலைமை
வகிக்கும் அமைச்சருக்கு ஓர்
வேண்டுகோள் விடுக்க ஆசையுறு
கிறேன்—அமைச்சர் அவர்கள்
கல்வி இலாகாவையும் நிர்வகிப்
பவர் என்ற காரணத்தால்; அண்
மையிலே திருவிளையாடல் புரா
ணத்தில் ஒரு பகுதியை நாடக
மாக நடிக்க வேண்டுமென்பதற்கா
கப் படித்துப்பார்த்தேன். அதில்,
பார்ப்பன இளைஞன் ஒருவன்
பெற்ற தாயை தாரமாக்கிக் கொள்
ளும் கட்டம் ஒன்று வந்தது......"

இந்நேரத்தில், கொற்றியில் ஈரம்
தரித்து முதல் வகுப்பில் அமர்ந்
திருந்த ஒருவர் எழுந்து, "இது
கட்சி மேடையல்ல; நாங்கள் நாட
கம் பார்க்கத்தான் வந்துள்ளோம்"
எனக் கூச்சலிட ஆரம்பித்தார்.

அதைத் தொடர்ந்து பின்புற
முள்ளவர்களிலிருந்து சாதகபாதக
மான கூச்சல்கள் எழுந்தது. அது
போழ்து, மேடையில் இருந்த
தலைவர் (நிதியமைச்சர்) குறுக்
கிட்டு, அமைதியாக இருக்கவேண்டு
மென்பதை உணர்த்தும் வகையில்
கையை அமர்த்திக் காட்டியும்
குழப்பம் அடங்க சிறிது நேர
மாயிற்று.

தொடர்ந்து, எம். ஜி. ஆர். பேசு
கையில், மேலும் குறிப்பிட்
டாவது:—

"யாரும் என்னை தவறாகக்
கருதவேண்டாம். நான் எந்தக்
கட்சி சார்பாகவும், நானாகவும்
இங்கு வரவில்லை. நீங்கள் அழைத்
தீர்கள்—வந்தேன்; அமைச்சர்
அவர்கள் நடிப்பைப் பற்றி பேசும்
படி கூறினார், பேசுகின்றேன்—
நடிகன் என்ற முறையில்தான்,
இங்கு, என் மனதில் தவறு என்று
தோன்றியதை எடுத்துக் காட்டி
கண்டிக்கிறேன்.

"கேடு பயக்கும் அத்தகைய
ஏடுகளை தடை செய்ய
வேண்டும் என்றுகூட கனம்
அமைச்சர் அவர்களைக் கேட்
டுக்கொள்கிறேன்."

ஆனால், அதே நேரத்தில் உங்க
ளுக்குக் கூற விரும்புகிறேன்—
நான் எந்தக் கட்சியினுடைய சார்
பிலும் பேசுவதாக நீங்கள் கருதக்
கூடாது. (அமைச்சரின் புன்னகை
யும், மக்களின் ஆரவாரமும்).

எனக்கு ஒரு கட்சியுண்டு;
கொள்கையுண்டு. நான்
என்னுடைய நாடகங்களில்
என் கட்சிக் கொடியைக்
காண்பிப்பதாகக்கூட சிலர்
வருந்துவதாக என்னிடமே
கூறியிருக்கிறார்கள். அவசி
யம் ஏற்படும் நேரங்களில்
என் கட்சிக் கொடியை
காண்பிக்கவும், கொள்கை
யைக் கூறவும் தவறமாட்
டேன்.

இப்போது நான் பேசுகையில்
குறுக்கிட்டு கூச்சலிட்ட நண்பர்
களுக்கு அறைகூவல் விடுக்கின்
றேன்:—

என்னால் நடத்தப்படும் "இன்
பக் கனவு" நாடகத்தை வந்து
காணுங்கள்; அப்பொழுது புரிந்து
கொள்வீர்கள் — என் கட்சியின்
லட்சியங்களை—நான் எடுத்துக்
காட்டும்வகையைப் பற்றியும்-(மீண்
டும் அமைச்சரின் புன்னகையும்,
மக்களின் ஆரவாரமும்) என்று
நான் கருதி, என் உரையை முடித்
துக் கொள்கிறேன்"

அமைச்சர் (தலைவர்) தனது
முடிவுரையில், 'இராமச்சந்திரன்
அவர்கள், தான் அதிகமாகப்
படிக்கவில்லை என்று கூறினார்;
ஆனால், அவருடைய பேச்சுத் திற
னும் அருமையான சொற்பொழி
வும், படிப்பு வேறு—திறமை, அனு
பவம் வேறு—என்பதை நிரூபித்து
விட்டது; யார் எதைக் கூறினா
லும், அதில் நமக்கு வேண்டியன
வற்றை எடுத்துக்கொண்டு, வேண்
டாதவற்றைத் தள்ளிவிடலாம்;
அதற்காக, இடையிலே எழுந்து,
பேசுவதைத் தடுக்கக் கூடாது"
என்று குறிப்பிட்டார்.

பெங்களூர் – பிளாக்பள்ளி தி. மு. கழகம்

31—10—54 காலை 9 மணிக்கு,
தோழர் என். தெய்வலிங்கம் தலை
மையில், கப்பன் பூங்காவில் நடை
பெற்ற பொதுக்குழு கூட்டத்தில்,
தோழர் எ. டி. பிரான்சிஸ் அவர்
கள், மாநாட்டில் கிளைக் கழகம்
ஆற்றவேண்டிய தொண்டினைக்
குறித்து சொற்பொழிவாற்றிய
பின், தோழர் ப. அரங்கசாமி
தொண்டர்களுக்கான அறிவுரை
களை வழங்கினார். பின்னர் சில
முக்கிய முடிவுகள் செய்யப்பட்
டன.

விளாம்பட்டி தி. மு. க.

28—10—54 இரவு 9 மணிக்கு,
இவ்வூரில், தோழர் எஸ். வி. சாமி
தலைமையில் நடைபெற்ற செயற்
குழுக் கூட்டத்தில், கல்லக்குடி
அறப்போர், திரு-தமிழக இணைப்
புப் போராட்டங்களில் உயிர் நீத்த
தோழர்களுக்கு அனுதாபம் தெரி
வித்தும், விடுதலை பெற்றப் பிரெஞ்
சிந்தியப் பிரதேசங்களை அவை
களில் வழங்கப் பெறும் மொழி
வாரியாக, அந்தந்த மொழி பேசப்
படும் மாநிலங்களுடன் இணைக்க
வற்புறுத்தியும், வடநாட்டு அகதி
களுக்குச் செய்தது போல்,
இலங்கையிலிருந்து வெளியேற்றப்
படும் திராவிட மக்களுக்கு
வாழ்க்கை வசதிகள் செய்துதர
மத்திய சர்க்காரைக் கேட்டுக்
கொண்டும் தீர்மானங்கள் நிறை
வேற்றப்பட்டபின், வரவு—செலவு
கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்
புக் கொள்ளப்பட்டது.

காடுபட்டி தி. மு. கழகம்

27—10—54-ல், தெற்கு வட்
டாரம் 'செழியன் மறுமலர்ச்சி
மன்ற'த்தில் தோழர் சர்க்கரை
தலைமையில் நடைபெற்ற கழக
உறுப்பினர்கள் கூட்டத்தில்
தோழர் க. மு. வீ. முத்துக்கருப்
பன், 'பழைமை மெருகேறிய
சமுதாய மக்களிடையே நமது
கழக லட்சியங்கள் பற்றி எடுத்துக்
கூறும் முறை' என்பதுபற்றி விரி
வுரையாற்றினார். பின்னர்,
தேசிகவிநாயகம் மறைவுக்கு அனு
தாபம் தெரிவித்துத் தீர்மான
மொன்று நிறைவேற்றப்பட்டது.

காளப்பநாய்க்கன்பட்டி தி. மு. கழகம்

2—11—54 மாலை 7 மணிக்கு
தோழர்கருப்புடையார்தலைமையில்
நடைபெற்ற கழகச் செயற்குழுக்
கூட்டத்தில், தி. மு. கழகக் கொள்
கைகள் பற்றி தோழர்கள் பலர்
பேசினர். தோழர் சிற்றுளி-சுப்
பிரமணியம் பேச்சாளராகத் தேர்ந்
தெடுக்கப்பட்டார். பின்னர் கழக
நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட
னர்:— செயலாளர்: கொ. பெரிய
சாமி; துணைச் செயலாளர்: செ.
கருப்பண்ணன்; பொருளாளர்: க.
குப்பமுத்து; மாவட்டப் பிரதிநிதி:
வெ. இரா. பெரியண்ணன்.

வரகனேரி—கல்பாளையம் (திருச்சி) தி. மு. கழகம்

31—10—54 இரவு 8½ மணி
யளவில், தோழர் எம். எஸ். மணி
அவர்கள் தலைமையில் நடைபெற்ற
மேற்படி 27-வது வட்டக் கழகக்
கூட்டத்தில், நிர்வாக உறுப்பினர்
கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—
செயலாளர்: வி. கே. முனுசாமி;
துணைச் செயலாளர்: எம். ஏ. ஷர்
பதீன்; பொருளாளர்: என். முரு
கேசன்; நகர கழகப் பிரதிநிதி: வி.
கே. முனுசாமி; செயற்குழு உறுப்
பினர்கள்: கே. சுபான், என். அரு
ணாசலம், ஆர். கலியப்பெருமாள்,
ஏ. ஜகதீசன், வி. குசை ஆகியோர்
தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தர்மபுரி தி. மு. க. (கிளை)

1—11—54 இரவு 9 மணிக்கு,
கழகத்தில், வாராந்திர சொற்
பயிற்சிக் கூட்டம் தோழர் எம். பி.
பழனியப்பன் தலைமையில் நடை
பெற்றபோது, 'சீர்திருத்தம்' என்
பதுபற்றி, தலைவரவர்கள் பேசிய
பின், தோழர்கள் பலர் சொற்
பொழிவில் பங்கு கொண்டனர்.

எழுமலை தி. மு. க. (கிளை)

31—10—54-ல், இவ்வூரில்
தோழர் கு. பரமசிவம் தலைமை
யில் நடைபெற்ற கழக உறுப்பினர்
கூட்டத்தில், வரவு-செலவு கணக்
குகள் சரிபார்க்கப்பட்டு தீர்மானங்
கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஆந்திராவில் புதியதேர்தல் நடைபெறும்

எதிர்க் கட்சிகள் பதவி பெறுவதை காங்கிரஸ் விரும்பவில்லை

ஆந்திர மாநிலத்தில் பிரகாசம் மந்திரிசபை கவிழ்ந்ததையொட்டி, அங்கு பொதுத் தேர்தல் நடைபெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்று, அரசியல், உத்தியோக வட்டாரங்களில் கருதப்படுகின்றனவாம். எதிர்க் கட்சிக் குழுவினரால், நிலையாக நிற்கக்கூடிய ஒரு மந்திரிசபையை அமைக்க முடியாது என்று அதற்கு காரணம் சொல்லப்படுகிறது.

டில்லியிலிருந்து தகவல் வந்ததும் கவர்னர், சட்டசபையைக் கலைத்துவிட்டு மறுபொதுத் தேர்தலுக்கு உத்திரவிடுவார் என்று நம்பப்படுகிறது.

தற்போதைய எதிர்க் கட்சிகளால் நிறுவப்படும் மந்திரி சபையும் நிலைக்காது என்ற நிலை ஏற்பட்டால்தான் ஜனாதிபதியின் நேரடி ஆட்சி நடைபெறும் என்றும், அதையடுத்து பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

ஆந்திராவின் துணை முதலமைச்சர், ஆந்திராவில் உடனடியாகத் தேர்தல் நடைபெறும் என்றும், இன்னும் 3 மாத காலத்துக்குள் மறு பொதுத்தேர்தல் நடைபெறுவது என்பது சாத்தியமே என்றும் கூறியிருக்கிறார். பெரும்பாலும் வருகிற மார்ச்சு திங்கட்குள் ஆந்திராவில் தேர்தல் நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

★

சட்டசபையைக் கலைத்துவிடுக!

கவர்னருக்கு மந்திரி சபை யோசனை!

ஆந்திர சட்டசபையை உடனடியாகக் கலைத்துவிட வேண்டுமென்று மந்திரிசபை, கவர்னருக்கு ஆலோசனை கூறியிருக்கிறது.

எவ்விதமான ‘காபந்து’ மந்திரி சபையிலும், இப்போதைய அமைச்சர்கள் பதவி வகிக்க விரும்பவில்லையென்றும், எனவே சர்க்கார் நிர்வாகத்தில் மாறுதல் ஏற்படும்வரை பிரகாசம் மந்திரிசபை பதவியில் நீடித்திருக்க இணங்குள்ளதாகவும் தெரிகிறது.

‘ஐக்கிய மக்கள் இயக்கம்’ என்ற பெயரிலுள்ள முன்னாள் கம்யூனிஸ்டு கட்சி எம். எல். ஏ.-க்களும்; பிரஜா, பி. சோ. கட்சிகளும் சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்த வேண்டுமென்ற யோசனையை ஆதரித்துள்ளதாகவும் தெரிகிறது.

இவைபற்றிய நிலைமைகளைப் பரிசீலிக்கவும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயவும் தமக்குக் கொஞ்சம் அவகாசம் தேவை என்று, கட்சித் தலைவர்களிடம் கவர்னர் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

இந்நெருக்கடிகளின் காரணமாக திட்ட மந்திரி சஞ்சீவையா, இத்திங்கள் 12, 13-ந் தேதிகளில் டில்லியில் நடைபெறவிருக்கும் தொழிலமைச்சர்கள் மாநாட்டிற்குக் கலந்துகொள்ளவிருந்த பயண ஏற்பாடுகளை ரத்து செய்துவிட்டாராம்.

திட்ட மந்திரி, தமது பயணத்தை ரத்து செய்ததிலிருந்து, அதற்குள், பிரகாசம் மந்திரி சபையின் இராஜினமா அங்கீகரிக்கப்பட்டுவிடும் என்று இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் யூகிக்கின்றன.

‘அதிக பட்சம் ஒரு வாரத்துக்கு மேல் பதவியிலிருப்பது சரியல்ல’ என்று, மந்திரி சபை வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது

கர்நூல், நவ. 6—

மதுவிலக்குப் பிரச்சினையில் இராமமூர்த்தி குழுவின் சிபாரிசுகள் பற்றி சட்டசபையில் ஏற்கனவே நிறைவேறிய தீர்மானங்களை நிறைவேற்ற சர்க்கார் தவறிவிட்டதைக் கண்டித்து ஆந்திர சட்டசபை கிருஷிக் லோக் கட்சித் தலைவர் லட்சண்ணு கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஒரு ஓட்டு வித்தியசத்தில் நிறைவேற்றப்பட்டதால், ஆந்திர மந்திரிசபை கவிழ்ந்தது.

கடைசி 5 நிமிடங்களில், காங்கிரசைச் சேர்ந்த என். சங்கர ரெட்டி, ஏ. வெங்கடசுப்பிரமணியம் ஆகிய இரண்டு உறுப்பினர்களும் எதிர்க்கட்சியுடன் சேர்ந்துகொண்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்குச் செய்ததால், மந்திரி சபை தோல்வி கண்டது.

இம்மந்திரி சபையைக் கவிழ்க்க மூலகாரணரான முன்னாள் அமைச்சர் சங்கர ரெட்டி, தாம் பேசுகையில், ஆந்திர பிரதேச காங்கிரசிடமிருந்து எத்தகைய கட்டளையும் தமக்கு வரவில்லையென்றும், கட்சி கொரடாவும் இல்லையென்றும், சட்டசபைக் கட்சியைக் கலந்து கொள்ளாமல், மந்திரி சபை ஜனநாயகப் பண்பற்ற முறையில் செய்யும் முடிவுகளைக் கண்டிக்கவே, தாம் சர்க்காருக்கு எதிராக வாக்குச் செய்ததாகவும், அவ்வாறு, சர்க்காருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தது முற்றிலும் நியாயமே என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் - ஆப்கன் தகராறுகள்

தீர்த்துவைக்க சவூதி அரேபியா மன்னர் முயற்சி

பாகிஸ்தானுக்கும் - ஆப்கானிஸ்தானத்திற்குமிடையே உள்ள தகராறுகளைத் தீர்த்துவைக்க தான் தயார் என்று சவூதி அரேபிய மன்னர் இபின்சாத் அறிவித்திருக்கிறார்

பக்தூனிஸ்தான் அமைக்கும் பிரச்சினையில் இரு நாடுகளுக்கும் இடையே பலத்த கருத்து வேற்றுமைகள் உள்ளன.

பக்தூனிஸ்தான் கோரிக்கையில் பாகிஸ்தானைச் சேர்ந்த சில பகுதிகளும் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது; ஆப்கனிஸ்தான் பக்துனிஸ்தானை ஆதரிக்கிறது.

இபின் சாத், இருநாட்டுப் பிரதமர்களுக்கும், பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ளா வேண்டுமென்று கோரி கடிதங்கள் எழுதியுள்ளார் என்று தெரிகிறது.

“திரு — கொச்சி சர்க்கார் விலகவேண்டும்”

ஆந்திர பி.—சோ. கட்சி நிர்வாகக்குழு தீர்மானம்

கர்நூல், நவ. 7—

ஆந்திர பிரஜா—சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில், திரு—கொச்சி மந்திரி சபை நீடிப்பால் சோஷலிச இயக்கத்துக்கே பெருத்த நஷ்டமென்றும், எனவே திரு—கொச்சியின் பி.—சோ. கட்சி மந்திரி சபை உடனே இராஜினமாச் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணுதுரை

நிகழ்ச்சிகள்

14—11—54: திருப்பூர்: தி. மா. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

15—11—54: கோபிசெட்டிப் பாளையம்: காலை 9 மணிக்கு விவசாயிகள் மாநாடு;

மாலை: நகரமன்றம் வரவேற்பு;

இரவு: தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம்

16—11—54: காங்கயம்: மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் கோவைமாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், அ. பொன்னம்பலனர் அவர்களும் கலந்து கொள்வார்கள்.

பொதுக்கூட்டம்

★

9—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, ஆனைக்கார கோனன் தெருவில் (கினிமா சென்ட்ரல் அருகாமையில்) தோழமைக் கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தலைவர்: கே. ஆர். இராசு

பேசுவோர்:

சி. என். அண்ணுதுரை

காஞ்சி கல்யாணசுந்தரம்

திருக்குறள் வகுப்பு

9—11—54 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் சாரதாம்பாள் ஆகியோர் ‘செய்நன்றி அறிதல்,’ ‘நடுவு நிலைமை’ என்பவை குறித்து சொற்பொழிவாற்றுவர்.

நிலவரி வசூல்

கிராமப் பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ளும்

மத்திய பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக நடவடிக்கை!

கிராமங்களில் நிலவரியை வசூலிக்கும் பொறுப்பினை கிராமப் பஞ்சாயத்துகளிடம் பரீட்சார்த்தமாக ஒப்படைப்பது என்று, மத்திய பிரதேச அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்போது கிராம நிர்வாகம், தேர்தல் அடிப்படையில் நியமிக்கப்படுகிற கிராமாதிகாரியிடம் இருக்கிறது.

இப்போது, நில வரி வசூலிப்பது உட்பட கிராம நிர்வாகம் முழுவதையும், கிராம பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பது என்று அரசாங்கம் திட்டமிடுகிறது.

அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்திருப்பதை மாற்றுவதற்காகவே, மக்களின் பிரதிநிதித்துவ சபைகளுக்கு அதிகாரம் தர வேண்டுமென அரசாங்கம் கருதுகிறதாம்.

இம்மாதிரி நிர்வாக அதிகாரத்தை கிராமப் பஞ்சாயத்து சபைகளிடம் தரும் பொருட்டு, ம. பி. அரசாங்கம், கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தையும், இன்னும் தொடர்புடைய சட்டங்களையும் திருத்தி அமைத்திருக்கின்றது.

சம்பளத்துடன் விடுமுறை

தொழிலாளர்களுக்கு, ஒவ்வொரு வாரமும் சம்பளத்துடன் ஒரு நாள் விடுமுறை யளிப்பதாகவும், 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்றும், மத்திய மராமத்து இலாகா கண்டிராக்டர்களின் பிரதிநிதிகள் முடிவு செய்துள்ளனராம்.

“செஞ்சிலுவைச் சங்கம் செழிக்க நிதி கொடுத்து உதவுங்கள்”

முதலமைச்சர் காமராசர் வேண்டுகோள்

சென்னை ‘ராஜாஜி’ மண்டபத்தில், செஞ்சிலுவைச் சங்க நிதி வசூல் வார விழாவை ஆரம்பித்து வைத்து, முதன் மந்திரி காமராசர் பேசியதாவது:—

“எல்லாக் காரியங்களுக்கும் இரண்டுவித கருத்துக்கள் நிலவக் கூடும்; ஆனால், இந்த செஞ்சிலுவைச் சங்க நிதிவசூலில் இரு கருத்துக்கள் இருக்க நியாயமில்லை; எல்லோரும் ஒற்றுமையுடன் ஊக்கமாக உழைக்கலாம்.

“நல்ல காரியங்களுக்காகப் பணம் கேட்கும்போது நிறைய கொடுத்துதவ வேண்டும்; எங்கெங்கே வேதனையும், விம்மலும் நிலவுகிறதோ அங்கெல்லாம் சென்று சிரித்த முகத்துடன், சிரமம் பாராது பணிபுரியும் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு நாம் உதவ வேண்டும்.

“பெரும் பணக்காரர்களிடம் போய் பணம் கேட்டு நேரத்தை வீணுக்கிக் கொண்டிருப்பதை விட, அந்த நேரத்தில் சாதாரண மக்களிடம் கேட்டால் சிறுசிறு தொகையாக நிரம்பக் கிடைத்துவிடக்கூடும்.”

சிறப்புக் கூட்டம்

7—11—54 காலை 10 மணிக்கு சென்னை கோகலேமன்றத்தில், எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் சிறப்புக் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமை வகித்தார். தோழர்கள் இராசாபாதர், மணி, இசை முரசு நாகூர் அனீபா, இசைச் செல்வி ஜி. கஸ்தூரி ஆகியோர் இசை விருந்தளித்தனர்.

பின்னர் தோழர் அ. பொன்னம்பலனர், ‘கடவுளும் - மதமும்’ என்னும் தலைப்பிலும், தோழர் டி. வி. நாராயணசாமி ‘நடிகனுக்குக் கட்சி தேவையா?’ என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், ‘அச்சம்’ என்னும் தலைப்பில் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்கு தாய்மார்கள் உள்பட ஏராளமானவர் வந்திருந்தனர்.

கூட்டத்தில், கல்லக்குடி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் கடந்த ஜூலை அறப்போரின்போது உயிர்நீத்த தோழர்களுக்கு என்று ரூ. 25 பொதுச் செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

குறிப்பு:—இச்சிறப்புக் கூட்டம் சம்பந்தமான வரவு - செலவு கணக்கு சீக்கிரமே வெளியிடப்படும் என்று கூட்ட நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் மீது வழக்கு

கராச்சி, நவ. 8—

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்ததற்காக அவர் மீது வழக்கொன்றை பெடரல் கோர்ட்டில் தாக்கல் செய்ய, கராச்சியிலுள்ள ஒரு பிரபல வக்கீல் லாகூருக்குச் சென்றுள்ளாராம். இன்று அவர், அம்மனுவை தாக்கல் செய்யலாமென்றும் தெரிகிறது.

★

சுஹ்ரவர்த்தியின் மௌனம்!

“பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல், தங்களுடன் ஏதாவது தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதுண்டா?” என்ற கேள்விக்கு, பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் சுஹ்ரவர்த்தி, அவ்விஷயத்தை மறுக்கவோ அல்லது நிச்சயப்படுத்தவோ செய்யாமல், ‘பாகிஸ்தானில் உடனே பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்,’ என்று மட்டும் கூறினர்.

தோழர் சி. பி. சிற்றரசு உடல் நிலை

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் வயிற்றுக்கோளாறின் காரணமாக, பெங்களூர் விக்டோரியா மருத்துவமனை தலைமை டாக்டர் திரு. டி. எஸ். ஜெயராம் அவர்களால் வயிற்றிலிருந்து நீரை எடுத்துப் பார்த்ததில், ஜீரணக் கருவிகளின் இயக்கங்கள் தலைகீழ் மாற்றத்தை உண்டாக்கியிருப்பதால், இரண்டு திங்கள் தங்கி மருத்துவம் செய்து கொள்ளவேண்டுமென்று பணித்திருக்கிறார். மேற்கொண்டு ஏதாவது தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்:— எஸ். வி. பதி, 53, நியூ கலாசிபாளையம் எக்ஸ்டன்ஷன், பெங்களூர்—2.

இலங்கையில் தோழர் ஆசைத்தம்பி

4-11-54-ல், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் திருச்சியிலிருந்து விமான மூலம் பகல் 12 மணிக்கு இலங்கை வந்து சேர்ந்தார். யாழ்ப்பாண தி.மு. கழக செயலாளரால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார். விமான நிலையத்தில் கழக அனுதாபிகளும், தோழர்களும் ஏராளமாக வந்திருந்து தோழர் ஆசைத்தம்பியை வரவேற்றனர். புகைப் படங்களும் எடுக்கப்பட்டன.

பம்பாயில் தோழர் எம். எஸ். இராமசாமி

பம்பாய், நவ. 6—

பம்பாய் தி. மு. கழக ஆண்டு விழாவிலும், ஆமதாபாத் தி மு. கழகப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதற்கென வந்துள்ள அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கட்கு இன்று நண்பகல் 12½ மணிக்கு பம்பாய் தாதர் நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் எஸ். தியாகராசன், கழக, கிளைக் கழகத் தோழர்கள் பலரும், சவுந்திரபாண்டியனர் பகுத்தறிவு மன்றச் செயலாளர் குறள்தாசன் உட்பட மன்ற உறுப்பினர்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

எனது நன்றி

29—9—54ல் சேலம் மாவட்டம் எத்தாப்பூர் தொகுதியில் நடந்த மாவட்டக் கழகத் தேர்தலில் என்னைத் தேர்ந்தெடுத்த பொது மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்ட தி. மு. கழகத் தொண்டர்களுக்கும், திராவிட கழகத் தொண்டர்களுக்கும், தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என்நன்றி கலந்த வணக்கத்தை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ. ஆனைமுத்து,
ஆரிப்பாளையம்.

‘பழிக்குப் பழி’ நாடகம்

31—10—54ல், பரமக்குடி வட்டம், குமாரக்குறிச்சி கிராமத்தில், செல்லச்சாமி குழுவினரால் “பழிக்குப் பழி” என்ற நாடகம் எம். ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றது. முடிவில் நாடகத்தைப் பாராட்டி தோழர் எஸ். எஸ். மணியன் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.